பிரசார்பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**29 08 2026** **SATURDAY** **6.30 PM**

## மாநிலச்செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

1) பொருளாதாரத்தில் மட்டுமின்றி கலாச்சார பாரம்பரியத்திலும் முன்னணி நாடாக இந்தியா திகழ்வதாக பாதுகாப்பு அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

2) வெங்காய விலையை கட்டுப்படுத்தும் நோக்கில் மகாராஷ்ட்ராவிலிருந்து, சென்னைக்கு சிறப்பு சரக்கு ரயில் மூலம் வெங்காயம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

3) தமிழகத்தை சேர்ந்த விளையாட்டு வீரர்கள் தங்களது திறமைகளை சிறப்பாக வெளிப்படுத்தி வெற்றிபெற வாழ்த்துவதாக முதலமைச்சர் திரு விஜய் கூறியுள்ளார்.

4) தமிழகத்தின் ஓரிரு இடங்களில் அடுத்த மூன்று தினங்களுக்கு லேசான மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5) **Pontianak** சர்வதேச சேலஞ்ச் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Tanvi Patri** இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

- இனி விரிவான செய்திகள் ---

<<<<<<>>>>>>

பொருளாதாரத்தில் மட்டுமின்றி கலாச்சார பாரம்பரியத்திலும் முன்னணி நாடாக இந்தியா திகழ்வதாக பாதுகாப்பு அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

உத்தரப்பிரதேச மாநிலம் லக்னோவில் பாபா சாஹேப் அம்பேத்கர் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் உரையாற்றிய அவர், உலகளாவிய சட்டங்களை உருவாக்குவதில் இந்தியா பங்காற்றி வருவதாக தெரிவித்தார்.

நமது மொழி, கலாச்சாரம், பாரம்பரியம் நாட்டிற்கு பெருமை சேர்ப்பதாக அவர் குறிப்பிட்டார்.

பல்கலைக்கழகங்கள் நாட்டின் வளர்ச்சிக்காக பங்காற்ற வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

கடந்த 12 ஆண்டுகளாக நாட்டின் கல்வி மேம்பட்டு வருவதாக தெரிவித்த திரு ராஜ்நாத் சிங், தேசிய கல்விக்கொள்கை மூலம், கல்வித்திறன் மேம்பட்டுள்ளதாக கூறினார்.

<<<<<<>>>>>>

வெங்காய விலையை கட்டுப்படுத்தும் நோக்கில் மகாராஷ்ட்ராவிலிருந்து, சென்னைக்கு சிறப்பு சரக்கு ரயில் மூலம் வெங்காயம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது

மகாராஷ்ட்ரா மாநிலம் நாசிக் மத்திய கிடங்குகளிலிருந்து வெங்காயம் ஏற்றப்பட்ட சரக்கு ரயில் இன்று சென்னைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து, மத்திய அரசு வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், இதன்மூலம், சந்தைகளில் கூடுதல் வெங்காயம் அதிக அளவில் விற்பனை செய்ய வழிவகை ஏற்படும் என்றும், விலையை கட்டுப்படுத்த முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நுகர்வோருக்கு குறைந்த விலையில் வெங்காயம் வழங்குவதற்காக தில்லி, சென்னை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளுக்கு வெங்காயம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

விஷ்வ ஹிந்து பரிஷத்தின் அகில உலக முன்னாள் தலைவர் எஸ். வேதாந்தம் மாரடைப்பு காரணமாக இன்று சென்னையில் காலமானார். அவருக்கு வயது 93.

அவரது உடல் மேற்கு மாம்பலம் ஜெய்கோபால் இந்து வித்யாலயா பள்ளி வளாகத்தில் பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது.

அவரது மறைவுக்கு தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் உள்ளிட்ட தலைவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

<<<<<<>>>>>>

சர்வதேச மற்றும் தேசிய அளவிலான போட்டிகளில் தமிழகத்தை சேர்ந்த விளையாட்டு வீரர்கள் தங்களது திறமைகளை சிறப்பாக வெளிப்படுத்தி வெற்றிபெற வாழ்த்துவதாக முதலமைச்சர் திரு விஜய் தெரிவித்துள்ளார்.

தேசிய விளையாட்டுத் தினம் இன்று கொண்டாடப்படுவதையொட்டி அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், இந்திய ஹாக்கி அணியின் தலைசிறந்த வீரரும், உலக அளவில் அபார சாதனை படைத்தவருமான மேஜர் தயாந்த் சந்த் பிறந்த நாள் தேசிய விளையாட்டு தினமாக கொண்டாடப்படுவதாக கூறியுள்ளார்.

விளையாட்டு பதக்கங்களை வெல்வதற்கு மட்டுமல்ல, ஒழுக்கம், விடாமுயற்சி, தன்னம்பிக்கை, தலைமைப்பண்பு ஆகியவற்றை வளர்த்துக் கொள்வதற்கான சிறந்த களமாக திகழ்கிறது என்று திரு விஜய் தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>>

தமிழகத்தில் **40** வருடங்களாக வீட்டுமனை பட்டா பெறாத மக்களுக்கு அவர்களது பகுதிக்கு சென்று பட்டா வழங்கும் பணிகள்

தற்போது தொடங்கியுள்ளதாக மாநில பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு சம்பத் குமார் தெரிவித்துள்ளார்.

கோவையில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் சார்பில் வீட்டுமனை பட்டாக்களை பயனாளிகளுக்கு வழங்கியபின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், முதல்கட்டமாக 500 பயனாளிகளுக்கு பட்டாக்கள் வழங்கப்படுவதாக தெரிவித்தார்.

மாநிலத்தில் 18 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மனுக்கள் பெறப்பட்டுள்ளதாகவும், அவர்களுக்கு படிப்படியாக பட்டா வழங்கப்படும் என்றும் திரு சம்பத் குமார் கூறினார்.

<<<<<<>>>>>>

மதுரை மீனாட்சியம்மன் கோவில் குடமுழுக்குக்கு தேவையான அனைத்து முன்னேற்பாடுகளும் சிறப்பாக செய்யப்பட்டு வருவதாக மாநில அமைச்சர் திரு நிர்மல் குமார் தெரிவித்துள்ளார்.

கோவிலில் ஆய்வு மேற்கொண்ட பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், குடமுழுக்கு விழா அடுத்த மாதம் 17-ஆம் தேதி வெகுவிமரிசையாக நடைபெற உள்ளதாக கூறினார்.

***(Sound Byte — நிர்மல் குமார் - 35 Sec.)***

<<<<<<>>>>>>

நாகை மாவட்டம் வேளாங்கண்ணி ஆரோக்கிய அன்னை பேராலய ஆண்டுத்திருவிழா கொடியேற்றத்துடன் இன்று தொடங்கியது.

இதில் ஏராளமான பக்தர்கள் கலந்துகொண்டு பிரார்த்தனைகள் செய்து வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வேளாண்கண்ணி பேராலயத்தில் பல்வேறு மொழிகளில் சிறப்பு பிரார்த்தனைகள் நடைபெற்றது.

இதையடுத்து, திருக்கொடி பேராலயத்திலிருந்து பாரம்பரிய முறைப்படி எடுத்து வரப்பட்டு பின்னர் முக்கிய வீதிகள் வழியாக திருக்கொடி பவனி நடைபெற்றது.

இந்நிலையில், சென்னை பெசன்ட் நகரில் உள்ள புனித ஆரோக்கிய அன்னை மாதா கோவிலிலும் கொடி ஏற்றப்பட்டது.

இதில் ஆயிரக்கணக்கானோர் பங்கேற்றனர்.

<<<<<<>>>>>>

முந்தைய அஇஅதிமுக ஆட்சியில் தமிழகத்தில் 11 மருத்துவக்கல்லூரிகள் கொண்டுவரப்பட்டதாக அக்கட்சியின் பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

தருமபுரியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், விவசாயிகளின் பயிர்க்கடன் 12 ஆயிரம் கோடி ரூபாய் பயிர்க்கடனை தள்ளுபடி செய்யப்பட்டதையும் சுட்டிக்காட்டினார்.

வண்டல்மண் எடுக்கும் விவசாயிகளை தவெக அரசு குறை கூறி வருவதாக திரு எடப்பாடி பழனிசாமி தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு, களிமண் விநாயகர் சிலைகள் தயாரிக்கும் பணி தீவிரமடைந்துள்ளது.

தேனி மாவட்டம் சின்னமனூரில் வண்ணமயமான விநாயகர் சிலைகள் தயாரிக்கப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

***(Voice Byte — ராஜ்குமார் - 39 Sec.)***

சுற்றுச்சூழலை பாதுகாக்கும் வகையில் களிமண் சிலைகளை தயாரித்து வருவதாக தேனியை சேர்ந்த களிமண் சிலை தயாரிப்பாளர் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

***(Sound Byte — களிமண் சிலை தயாரிப்பாளர் - 31 Sec. )***

<<<<<<>>>>>>

தமிழகத்தின் ஓரிரு இடங்களில் அடுத்த மூன்று நாட்களுக்கு லேசான மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையத்தின் தென்மண்டல இயக்குநர் டாக்டர் வி ஆர் துரை தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

***(Sound Byte — வி ஆர் துரை - 50 Sec.)***

<<<<<<>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

நேபாளத்திலிருந்து மீட்கப்பட்டு கடலூர் வந்தடைந்த **11** பேரை மாநில அமைச்சர் திரு ராஜ்குமார் வரவேற்றார்.

------------------

கள்ளக்குறிச்சி மாவட்டம் திருக்கோவிலூர் நகராட்சியில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சி திட்ட பணிகளை ஆட்சியர் பத்மஜா நேரில் ஆய்வு மேற்கொண்டார்.

--------------------

தூத்துக்குடியில் இன்று நடைபெற்ற தனியார் வேலை வாய்ப்பு முகாமில் **636** நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை மாநகராட்சி ஆணையர் பிரியங்கா வழங்கினார்.

------------------

நெல்லை பாளையங்கோட்டையில், செய்தி மக்கள் தொடர்புத்துறை சார்பில் **28-**வது அரசு பொருட்காட்சி தொடங்கியது.

<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

**Pontianak** சர்வதேச சேலஞ்ச் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Tanvi Patri** இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் அவர், **21-8, 21-9** என்ற செட் கணக்கில், கனடாவின் **Rachel Chan** -ஐ வென்றார்.

----------------

செர்பியாவில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Prarthana Thombare -** பல்கேரியாவின் **Karatancheva** இணை இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

***<<<<<<END>>>>>>***